(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 386.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஓகத்து 20, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2679/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'மில்கோ' நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் சிலர் ஒன்றிணைந்து இந்நாட்டின் பால் உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துகின்றார்கள் என்பதையும்;

(ii) அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர், நிறுவனத்தின் சகல சொத்துக்களையும் பிணையாக வைத்து, ரூபா 700 மில்லியனைச் செலவிட்டு, 'திரவப் பால்' பொதிசெய்யும் 2 இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளார்கள் என்பதையும்;

(iii) மீண்டும் சுமார் ரூபா 40 மில்லியன் கடனாகப் பெறப்பட்டு, இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு 'மில்கோ' நிறுவனம் தயாராகி வருகின்றது என்பதையும்;

(iv) கடந்த டிசம்பர் முதல் இதுவரை மேற்படி நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டிய பணத் தொகைகளைச் செலுத்தியிருக்கவில்லை என்பதையும்;

(v) அதன் வழங்குனர்களுக்கு ரூபா 100 மில்லியனுக்கும் அதிகமான பணத் தொகைகளை கடன்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஊழல்மிக்க அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு 'மில்கோ' நிறுவனத்தைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3279/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 - 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவரினால் (JAICA) இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள், கொடைகள் ஆகியவற்றின்,

(i) பெறுமதிகள் எவ்வளவு என்பதையும்;

(ii) கொடுத்துதவப்பட்ட காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) சராசரி வட்டிச் செலவு எவ்வளவு என்பதையும்;

(iv) கடன்கள் மற்றும் கொடைகள் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது கருத்திட்டங்கள் எவை என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3330/ '12

3.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில்,

(i) கற்பழிப்பு தொடர்பில் குற்றவாளிகளானவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) பெண் கொலைகள் தொடர்பில் குற்றவாளிகளானவர்களின் எண்ணிக்கை என்பதையும்

வருடாந்தம் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட காலப்பகுதியில் கற்பழிப்பு மற்றும் பெண் கொலைகள் தொடர்பில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அரசியலுடன் தொடர்புடைய நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இக்குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3923/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1985, 1995, 2005 மற்றும் 2012 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் இலங்கையில்,

(i) புற்றுநோய்க்கு இரையாகியுள்ள 01 மாதத்திற்கும் – 18 வருடத்திற்கும் இடைப்பட்ட வயதுடைய பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஓர் இலட்சம் பேருக்கு ஒப்பீட்டளவில் எத்தனை பேர் புற்றுநோய்க்கு இரையாகியுள்ளனர் என்பதையும்;

(iii) ஓர் இலட்சம் பெண்களுக்கு ஒப்பீட்டளவில் எத்தனைப் பெண்களுக்கு புற்றுநோய் பீடித்துள்ளதென்பதையும்;

(iv) ஓர் இலட்சம் ஆண்களுக்கு ஒப்பீட்டளவில் எத்தனை ஆண்களுக்கு புற்றுநோய் பீடித்துள்ளதென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் வருடாந்தம் மரணிப்பவர்களின் எண்ணிக்கையில் புற்றுநோய் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்நிலைமையை குறைப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4225/ '13

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கை அரசாங்கத்தினால் சீன ஏற்றுமதி, இறக்குமதி வங்கியிலிருந்து (The Export - Import Bank of China) பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடன் தொகைகள் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு வருடமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கடன் தொகைகள், பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கடன் தொகைக்காகவும் செலுத்த வேண்டிய வட்டி வீதங்கள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4464/ '13

6.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் ஆட்பதிவுத் திணைக்களத்தில் அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 11 பாதுகாப்பு அட்டைகளும் 02 மல்டி மீடியா கருவிகளும் காணாமற்போயுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது தொடர்பாக திணைக்கள மட்டத்தில் விசாரணைகளை மேற்கொண்டு இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் இனங்காணப் பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) இந்நபர்களால் ஏற்பட்டுள்ள நட்டம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கறுவாத்தோட்டம் பொலீசாரினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் மூலம் உரிய உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அல்லது குற்றவாளிகள் இனங்காணப்பட்டு உள்ளனரா என்பதையும்;

(ii) தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புடையதொரு நிறுவனத்தில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பான அரசின் நிலைப்பாடு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

4485/ '13

7.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பலாங்கொடை கல்தோட்ட மாவட்ட வைத்தியசாலை தற்போது சிதைவடைந்து மூடப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) கல்தோட்ட மாவட்ட வைத்தியசாலையிலிருந்து மருத்துவ வசதிகளை பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வைத்தியசாலையில் பணியாட்டொகுதியில் கடும் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும், ஒழுங்காக சேவை வழங்குவதற்கு போதியளவு கட்டட வசதிகள் இல்லை என்பதையும் அவர் ஏற்றுகொள்வாரா;

(ii) மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற மருத்துவர்கள், தாதிமார்கள் மற்றும் ஏனைய ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(iii) மேற்படி வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட வேண்டிய மற்றும் திருத்தப்பட வேண்டிய கட்டடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பிரதேசத்தின் மக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்காக மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான பணியாட்டொகுதியினரையும் ஏனைய அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4526/ '13

8\.

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல், வெலன்கொல்ல வீடமைப்புத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வீடமைப்புத் திட்டத்துக்கு செலவாகிய பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடு வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒரு வீட்டின் விற்பனை விலை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4621/ '13

9\.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) லேசர் கதிர்களை பயன்படுத்தி நிலத்தின் கீழ் காணப்படும் புதைபொருட்களை அவதானிக்கக்கூடிய ஓர் இயந்திரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப் பட்டுள்ளதென்பதையும், இது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதென்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இயந்திரத்தை இறக்குமதி செய்வதற்காக பாதுகாப்புத் துறையின் பலம்வாய்ந்த ஒருவரின் தலையீடு நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நபரின் பெயர் யாதென்பதையும்;

(iii) மேற்படி பாதுகாப்புத் துறையின் பலம்வாய்ந்தவரின் தலையீட்டின் காரணமாக மேற்படி இயந்திரம் தொடர்பான விசாரணை நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி விசாரணைகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி லேசர் இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்ட நாடு யாதென்பதையும்;

(ii) இதற்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரத்திற்கு மேலதிகமாக இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள இவ்வாறான இயந்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரம் அல்லது இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக நிலத்தின் கீழுள்ள புதைபொருட்களின் பாதுகாப்பிற்கு ஏதேனும் நிர்ப்பந்தம் ஏற்படுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அதற்கேற்ப தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4632/ ’13

10.

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு அனுமதின்றி விதை வகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்வாறு அனுமதியின்றி விதை வகைகள் இறக்குமதி செய்யப்படும் நாடுகள் யாவை ன்பதையும்;

(iii) அனுமதியின்றி இறக்குமதி செய்யப்படும் விதை வகைகள் யாவை என்பதையும்;

(iv) அனுமதியின்றி விதைகளைக் கொண்டுவருவதற்கான தேவைப்பாடு யாது என்பதையும்

(v) வெளிநாடுகளிலிருந்து விதைகளை இறக்குமதி செய்வதில் அரசு தலையீடு செய்வதிலுள்ள சிரமங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அனுமதியின்றி விதை வகைகள் இறக்குமதி செய்யப்படுவதனால் விவசாயிகள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இதைத் தடுப்பதற்கும் இது தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டுவதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அனுமதியின்றி விதைகளை இறக்குமதி செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் அனுமதியின்றி விதைகளை இறக்குமதி செய்பவர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக மேற்படி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4759/ ’14

11.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு பாற்பசுக்களை இறக்குமதி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு;

(ii) தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாற்பசுக்களின் எண்ணிக்கை யாது;

(iii) பால் மற்றும் இரட்டைப் பணிக்காக ஆடுகளை இறக்குமதி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு;

(iv) 2013 ஆம் ஆண்டளவில் மேற்படி ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4956/ '14

12.

கௌரவ நிரோஷன் பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் பத்துலு ஓய—உடப்பு வீதியை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(ii) இவ்வீதியின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது என்பதையும்;

(iii) இக் கம்பனிக்கு நிர்மாணப் பணிகளை ஒப்படைக்கும் போது முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வீதியின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டதால் மக்கள் கடும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(ii) இவ்வீதியின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீதியின் நிர்மாணப் பணிகள் நீண்ட காலமாக நிறுத்தப்பட்டிருப்பதால் போக்குவரத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5026/ '14

13.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை நுகர்வோர் இணையத்தின் ஊடாக கொள்வனவுக் கட்டளை அனுப்பி மருந்துகளை கொள்வனவு செய்யும் போக்கு அண்மைக் காலத்திலிருந்து வெகுவாக அதிகரித்துள்ளது என்பதையும்;

(ii) அவ்வாறு சந்தைப்படுத்தப்படுகின்ற அநேகமான மருந்து வகைகள் இலங்கையில் பதிவு செய்யப்படாதுள்ளவை என்பதையும்;

(iii) இணையத்தின் ஊடாக கொள்வனவுக் கட்டளை அனுப்பி பெற்றுக் கொள்ளப்படுகின்ற மருந்துகள் பெரும்பாலும் மருத்துவர்களின் சிபாரிசு இன்றி பயன்படுத்தப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இணையத்தின் ஊடாக உள்நாட்டு மக்களுக்குச் சந்தைப்படுத்தப்படுகின்ற மருந்துகள் தொடர்பில் முறைசார்ந்த ஆய்வொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறு மேற்கொள்ளப்படும் மருந்துகளின் சந்தைப்படுத்தலை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற சட்ட ரீதியான இயலுமை இந்நாட்டின் சுகாதார அதிகாரிகளுக்கு உள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மருத்துவர்களின் சிபாரிசு இன்றி இணையத்தின் ஊடாக மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பில் காணப்படும் அபாய நிலை தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மக்களை அது தொடர்பாக விழிப்புணர்வூட்டும் முறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2686/ '12

14.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) கொழும்பு பல்கலைக்கழகத்திற்குரிய பீடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

(iii) இப்பீடங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி யாது என்பதையும்;

(ii) மேற்படி நிதி ஏற்பாடுகள் 2012 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் நிலவிய அனைத்து தேவைகளையும் நிறைவு செய்து கொள்வதற்கு போதியதாக உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3280/'12

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டில் அரசாங்க சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(ii) அவர்களுக்கான பயிற்சி வசதிகள் எங்கே வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) பயிற்சிக் காலத்தின் போது அவர்களுக்கு கொடுப்பனவா அல்லது சம்பளமா வழங்கப்பட்டது என்பதையும்;

(iv) பயிற்சிக் காலத்தின் அளவு மற்றும் அவர்களுக்கு பயிற்சியளித்த பயிற்றுவிப்பாளர்கள் யார் என்பதையும்;

(v) பயிற்சிக் கையேடுகள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(vi) 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள் ஆட்சேர்க்கப்படவுள்ள பட்டதாரி பயிலுனர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்:

(vii) பட்டதாரி பயிலுனர்களின் தற்போதைய ஊதியம் மற்றும் எதிர்கால சம்பள அளவுத் திட்டம் ஆகியன யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 3.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

தொழிநுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பம், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

14.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

ஜயந்திபுர நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

மெத் சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

ஸ்ரீ லங்கா கமநல நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

ஜயரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

ஜம்மிய்யத்துல் ஸஹ்வா அல் - கைரிய்யா (ஜஸ்கா) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.